# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051900

1. District : மாவட்டம் சென்னை PS: காவல்நிலையம் சென்னை, V&AC, Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 08/AC/2022/CC-II Date: நாள் 19.10.2022 10.30 A...

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   சென்னை நகர் பிரிவு - II.
   (ii) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7.
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 18.10.2022
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை இரவு சுமார் 19.55 மணி...
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.10.2022 Time : நேரம் காலை 09.00 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.10.2022 Time : நேரம் காலை 10.30 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வில்லிவாக்கம் மகளிர் காவல் நிலையம் - சுமார் 20 கி.மீ. வடக்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் E. மோனிகா ஸ்ரீ (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் W/o. Dr. G. ...குமா...
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1996. (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் I st year LLB Student (g) Address : முகவரி No.20, F1, F2, ஐஸ்வர்யம் அபார்ட்மென்ட்... திருவேங்கடம் நகர், வில்லிவாக்கம், சென்னை...

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. அநுராதா, காவல் ஆய்வாளர், வில்லிவாக்கம் அனைத்து மகளிர் காவல் நிலையம், சென்னை-49.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M. விஸ்வகுமார் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
E. Manikkavel

[signature] 19.10.2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19/10/2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.10.2022.

Name: பெயர் M. VISVAKHUMAR
Rank: நிலை Inspector of Police, No. எண் DOHCo, CC-II, VAAC, Ch-16.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

....Continuation to column no.12 of FIR in Chennai, V&AC, Chennai City-II Cr.No.08/AC/2022/CC-II.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு -2-ன் காவல் ஆய்வாளர் M.விஸ்வகுமார் ஆகிய நான் இன்று 19.10.2022-ந்தேதி காலை 09.00 மணிக்கு அலுவகத்தில் பணியிலிருந்தபோது சென்னை, வில்லிவாக்கத்தை சேர்ந்த திருமதி.ஈ.மோனிகா ஸ்ரீ என்பவர் அலுவலகம் வந்து கணினி மூலம் தட்டச்சு செய்து கொண்டு வந்து அளித்த எழுத்துமூலமான புகாரினை பெற்று அதன் பேரில் மறைமுக விசாரணை செய்து இன்று 19.10.2022-ந் தேதி காலை 10.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அவர் அளித்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர், ஈ.மோனிகா ஸ்ரீ, W/o.Dr.ஜி.வினோத்குமார், No.20-F1, F2, ஐஸ்வரியம் அப்பார்ட்மெண்ட், திருமுருகன் நகர், சென்னை-600099. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, ஆலந்தூர், சென்னை - 600 016. ஐயா, வணக்கம். நான் மேற்கண்ட விலாசத்தில் என் இரட்டை ஆண் குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். நான் தற்போது எம்.ஜி.ஆர் சட்டக்கல்லூரி, மதுரவாயல் முதலாம் ஆண்டு LLB படித்து வருகிறேன். என்னுடைய சொந்த ஊர் கோயம்புத்தூர், கணபதிமாநகர். எனக்கும், சென்னையை சேர்ந்த டாக்டர்.ஜி.வினோத்குமார் அவர்களுக்கும் 12-03-2020 அன்று திருமணம் திருப்பூரில் நடைபெற்றது. என் கணவரும், அவர் குடும்பத்தினரும், அவருடைய உறவினர் திரு.ரவியும் என்னை வரதட்சணை கேட்டு வன்கொடுமைகள் செய்ததால் வில்லிவாக்கம் மகளிர் காவல் நிலையத்தில் 2021 ஜூலை மாதத்தில் அவர்கள் மீது புகார் அளித்தேன். நானும், என் கணவர் குடும்பத்தினரும் ஐஸ்வரியம் அப்பார்ட்மெண்ட், F1 & F2 வீட்டில் சேர்ந்து வசித்து வந்தோம். அதில் F1 குடியிருப்பு எனது கணவர் குடும்பத்தாருக்கு சொந்தமானது. F2 குடியிருப்பு என் கணவரின் சித்தியான மஞ்சுளா, க/பெ.ரவி என்பவருக்கு சொந்தமாகும். அந்த F2 குடியிருப்பிற்கு தனியாக வாடகை கொடுத்து வருகிறோம். நான் வரதட்சணை வழக்கு கொடுத்ததால், என் கணவரின் சித்தி மஞ்சுளா, அவருடைய வீட்டிற்குள் நான் அத்துமீறி புகுந்ததாக நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்றதனால், என் மீது V4 இராஜமங்களம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கை அப்போதிருந்த காவல் ஆய்வாளர் A.கண்ணன் அவர்கள் விசாரித்து இவ்வழக்கு பொய் வழக்கு (Mistake of Fact) என்று முடித்து வைத்தார். இந்த சமயத்தில் நான் ஏற்கனவே என் கணவர் மீதும், என் கணவர் குடும்பத்தார் மீதும் கொடுத்த புகாரில் வில்லிவாக்கம் மகளிர் காவல் நிலையத்தில் வரதட்சணை வழக்குப் பதிவு செய்தனர். என் கணவரும் அவரது குடும்பத்தினரும் கொலை மிரட்டல் அளித்ததால் V4 இராஜமங்களம் காவல் நிலையத்தில்

மீண்டும் ஒரு வழக்கு அவர்கள் மீது பதிவு செய்யப்பட்டது. மேலும், என்னை அந்த வீட்டில் இருந்து காலி செய்வதற்காக என்னுடைய பொருட்கள் அனைத்தையும் ஆட்கள் மூலம் கொள்ளையடித்து சென்றதால் மீண்டும் மற்றொரு வழக்கு அவர்கள் மீது V4 இராஜமங்களம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் என் கணவரின் சித்தி மஞ்சுளா, அவர் அளித்த புகாரை Mistake of Fact என்று முடிவு செய்த வழக்கை மீண்டும் மறுவிசாரணை செய்ய வேண்டுமென உயர்நீதி மன்றத்தை அனுகினார். மஞ்சுளா அளித்த புகாரினையும், நான் அளித்த வரதட்சனை புகாரையும் வில்லிவாக்கம் மகளிர் காவல் நிலையத்திலேயே விசாரித்து விரைவாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இதன் அடிப்படையில் என் கணவரின் சித்தி மஞ்சுளா கொடுத்த புகாருக்கு வில்லிவாக்கம் மகளிர் காவல் நிலையத்தில் இப்போதுள்ள காவல் ஆய்வாளர் திருமதி.அனுராதா முன்பு சுமார் 6 முறை ஆஜராகி என் தரப்பு விளக்கத்தையும், ஆதாரங்களையும் கொடுத்தேன். விசாரணையின்போது காவல் ஆய்வாளர் என் கணவர் தரப்பினரும் டாக்டர்.வீ.ஆ.ரவி மற்றும் மஞ்சுளாவும் பணம் கொடுக்க தயாராக இருப்பதாகவும் என்னையும் ஏதாவது கவனிக்கும்படி கூறியதால் நான் AC office க்கு சென்று விசாரணை சரியாக நடத்தப்படவில்லையென தெரிவித்தேன். AC அவர்கள் ஆய்வாளர் திருமதி.அனுராதா அவர்களை எச்சரித்தார். கடந்த வியாழக்கிழமை 13.10.2022ந்தேதி ஆய்வாளர் திருமதி.அனுராதா அவர்கள் என்னை காவல் நிலையத்திற்கு வர சொன்னதன் பேரில் மாலை சுமார் 06.10 மணிக்கு வில்லிவாக்கம் மகளிர் காவல் நிலையத்திற்கு சென்று ஆய்வாளர் அவர்களை சந்தித்தேன். ஆய்வாளர் திருமதி.அனுராதா அவர்கள் இவ்வழக்கை MISTAKE OF FACT யென முடிவு செய்து அனுப்பிவிட்டேன். இதற்கு மாஜிஸ்ட்ரேட் அப்ரூவல் APP அப்ரூவல் வாங்கவேண்டும். உன்னுடைய வரதட்சனை வழக்கையும் நான்தான் விசாரிக்கிறேன், அதில் Charge Sheet file செய்யவேண்டும். அதற்கு எனக்கு ரூ.20,000/- பணம் கொடுத்து விடவேண்டும் என்று கூறினார், இல்லை என்றால் நீ அளிக்கும் ஆதாரங்களை உன்னுடைய வழக்கில் பதிவு செய்யமாட்டேன் என்றும் தெரிவித்தார். அதற்கு நான் என்னிடம் பணம் எதுவும் இல்லை, நான் எப்படி பணம் தர முடியும் என்று கூறினேன். அதற்கு அவர் இந்த பணத்தை கொடுத்துவிடு, பிறகு வேற பணம் எதுவும் கேட்க மாட்டேன் என்று தெரிவித்தார். அதனால் நான் பிறகு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் மீண்டும் நேற்று 18.10.2022ந்தேதி இரவு சுமார் 07.00 மணிக்கு வில்லிவாக்கம் மகளிர் காவல் நிலையம் சென்று கூட்டமாக இருந்ததால் அறைக்கு வெளியில் காத்திருந்து ஆய்வாளர் திருமதி.அனுராதா அவர்களை அவருடைய அறையில் இரவு சுமார் 07.55 மணிக்கு பார்த்து என்னால் பணம் ரெடி செய்ய முடியவில்லை என்று

சொன்னேன். அதற்கு அவர் உனக்கு இரண்டு கேஸ் இருக்கு, ரெண்டும் தனித்தனி, இரண்டு கேஸ்லயும் நான் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால் பணம் ரூ.20,000/-த்தை கொடுத்தால் தான் உன் மேல் இருக்கும் MF case ஐ முடித்து கொடுப்பேன். உன் வரதட்சணை கேஸையும் முடித்து கொடுப்பேன் என்று கூறினார். என்னிடம் பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் பணத்தை ரெடி பண்ணிட்டு என்னை வந்து பார் என்று கூறி அனுப்பிவிட்டார். நான் ஏற்கனவே மிகவும் பாதிக்கப்பட்டு மன உளைச்சலில் உள்ளேன். இந்நிலையில் எந்த தவறும் செய்யாத என் மீது பதியப்பட்ட வழக்கை முடிப்பதற்கும், நான் அளித்த புகாரில் நடவடிக்கை எடுப்பதற்கும் காவல் ஆய்வாளர் திருமதி.அனுராதா லஞ்சமாக கேட்ட பணம் ரூ.20,000/-த்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளிக்கிறேன். இப்படிக்கு Sd (XXX) E.Monikkasree, 19.10.2022. Sir, Received a complaint on 19.10.2022 at 09.00 hrs. Sd (XXX) M.Visvakhumar, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16. Sir, after due verification, a case was registered in V &AC, Chennai City –II, Cr.No.08/AC/2022/CC-II, U/s. 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 19.10.2022 at 10.30 hrs. Sd (XXX) M.Visvakhumar, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16.

The original FIR along with complaint submitted before the Hon'ble Special Judge for the cases under prevention of corruption Act, Chennai and other copies submitted to officer concerned.

M.Visvakhumar
19.10.2022
Inspr. CC-II, V&AC, Ch.16.